வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 304/2023

வழக்குசாட்சி PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரீஸ்வரன், காவல் உதவி ஆய்வாளர், புழல் குற்ற பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | வேலுசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 38 |

தேதி 28.04.2026

எதிரிகள் ஆஜர்.

சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது புழல் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த ஆய்வாளர் சதீஷ் , விஜயகாந்த் ஆகியோர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் சதீஷ் என்பவர் நிலைய பணியில் இருந்தபோது கடந்த 08.09.2023 அன்று 23.30 மணிக்கு ராஜேஷ் அளித்த புகாரினை பெற்று எம்.3 புழல் காவல் நிலைய குற்ற எண். 591/2023 இதச பிரிவு 393 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ரஜேஷ், மணிகண்ட சுப்பையன், சதீஷ்குமார், அசோக் ஆகியோரை விசாரித்து தனிதனியே

வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் மறுநாள் சாட்சிகளான பூமிநாதன், தினேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அவை முறையே அ.த.சா.ஆ.3 மற்றும். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் எதிரிகளை அவர் தேடிவந்த நிலையில் 25.12.2023 அன்று பகல் 13 மணிக்கு புழல் சைக்கிள் ஷாப் அருகில் வைத்து எதிரிகள் மூவரும் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து அதில் எதிரி ஒருவர் இளவர் என்பதால் சிறார் நீதிமன்றத்தில் அவரை ஒப்படைத்து மற்ற இரண்டு எதிரிகளையும் விசாரணை செய்த்தில் 1வது எதிரி குற்ற எண். 894/2023 அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் எதிரிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

4. பின்னர் சாட்சிகள் ராஜன், பாலாஜி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் எதிரியை கைது செய்த எம்.3 புழல் ஆய்வாளர் விஜயகாந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்கின் விசாரணைக்கு பின்னர் சட்டப்பிரிவானது இதச பிரிவு 393 உ/பி 34 மாறுதல் செய்யப்பட்டது. மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிமீது இதச பிரிவு 393 உ/பி 34 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

## குறுக்கு விசாரணை

எதிரிகள் 3மாதம் கழித்து தான் கைது செய்யப்பட்டார்கள் என்றால் ஆமாம். ஆவணங்களின் அடிப்படையில் தான் வழக்கு விவரம் தெரியும் என்றால் ஆமாம். நிலுவையில் இருந்த வழக்கின் எதிரிகள் இருவர் மீதும் பொய்யாக இவ்வழக்கு பதிவுச் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் அனைவரும் வழக்கமாக காவல் நிலையத்திற்கு வரும் நபர்கள் என்றால் இல்லை. வழக்கினை சரிவர விசாரணைச்

செய்யாமல் புலன் விசாரணை அதிகாரி பொய்யாக பதிவுச் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.